بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *24/04/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாற்றின் ஒளியில் அன்னாருடைய உண்மைத்தன்மை குறித்த ஈமானுக்கு வலுவூட்டும் குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் தன்மையின் உயர் முன்மாதிரி தொடர்பாக அன்னாருடைய அழகிய முன்மாதிரி, நம்பிக்கையாளர்களுக்கான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவை பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டிருந்தன. இது தொடர்பாக மேலும் எடுத்துரைப்பேன். **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: "ஒரு மனிதன் பொய்யன் என்பதற்கு, அவன் கேள்விப்படும் ஒவ்வொரு செய்தியையும் மக்களிடையே கூறித் திரிவதே போதுமான அடையாளமாகும்."

தற்போது பாருங்கள்! இந்தப் பழக்கம் பொதுவாக மக்களிடையே உள்ளது; ஜமாஅத்திலும் சிலரிடம் இது மிக அதிகமாகக் காணப்படுகிறது. பிறகு ஓர் அறிவிப்பில் வருகிறது. **ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழர்களுக்குப் பொய்யை விட வெறுக்கத்தக்க குணம் வேறொன்றும் இருந்ததில்லை. யாராவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் பொய் சொல்லிவிட்டால், அந்த விஷயம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உள்ளத்தில் தங்கிவிடும். அவர் பொய் சொல்லிவிட்டார் என்பது அன்னாருக்கு தெரிந்து விடும். அது அன்னாருக்கு மிகுந்த வேதனையைத் தரும்; அந்த நபர் அதிலிருந்து தவ்பா செய்து (மன்னிப்பு கோரி), தனது நடத்தையைச் சீர்திருத்தி, பொய்யிலிருந்து முழுமையாக விலகத் தொடங்கிவிட்டார் என்பது அன்னாருக்கு தெரியவரும் வரை அதை உள்ளத்தில் வைத்திருப்பார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. **ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அறிவிக்கிறார்கள்**: "ஒரு பெண்மணி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, எனது கணவனின் மற்றுமொரு மனைவி இருக்கிறாள். எனது கணவர் எனக்குத் தராத ஒன்றைத் தந்தது போல எனது கணவரின் செல்வத்திலிருந்து மிகவும் திருப்தி கொண்டிருப்பது போல அவளிடம் பெருமையாகக் காட்டிக்கொள்வது என் மீது பாவமா? நான் அவளை எரிச்சலூட்டவும் சங்கடப்படுத்தவுமே இவ்வாறு செய்கிறேன் என்று கேட்டாள். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தனக்குக் கொடுக்கப்படாத ஒன்றைக் கொண்டு தான் திருப்தி அடைந்திருப்பதாகக் காட்டிக் கொள்ளும் ஒருவன், பொய்யால் ஆன இரண்டு ஆடைகளை அணிந்திருப்பவனைப் போன்றவன் ஆவான்."

இதன் விளக்கத்தில் எழுதப்பட்டுள்ளதாவது; இங்கு ஆடை என்ற சொல் ஓர் உதாரணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் என்னவென்றால், அந்த நபர்

பொய் மற்றும் மோசடியைப் பயன்படுத்துகிறார்; அவர் பொய்யால் ஆன இரண்டு ஆடைகளை அணிந்துள்ளார். ஒன்றை மேலாடையாக போர்த்தியுள்ளார்; மற்றொன்றை கீழாடையாக அணிந்துள்ளார்.

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: “நான்கு குணங்கள் எவரிடம் இருக்கிறதோ அவர் முழுமையான நயவஞ்சகர் ஆவார். எவரிடம் இவற்றில் ஒரு குணம் இருக்கிறதோ, அவர் அதை விடுவித்துக் கொள்ளும் வரை அவரிடம் நயவஞ்சகத்தின் ஒரு பகுதி இருக்கும். அவனிடம் அமானிதம் ஒப்படைக்கப்பட்டால் மோசடி செய்வான்; பேசினால் பொய் பேசுவான்; ஒப்பந்தம் செய்தால் ஒப்பந்தத்தை மீறுவான்; சண்டையிட்டால் கெட்ட வார்த்தை பேசுவான்.”

இந்த அனைத்து விஷயங்களும் ஏதோ ஒரு வகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொய்யை நோக்கியே கொண்டு செல்கின்றன அல்லது இவற்றின் மூலம் பொய் வெளிப்படுகிறது. **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்**: “அடியான் ஒருவன் பொய் பேசும்போது, அவன் செய்த அந்தச் செயலின் துர்நாற்றம் காரணமாக வானவர் அவனை விட்டு ஒரு மைல் தூரம் தள்ளிச் சென்றுவிடுகிறார்.”

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை தானியக் குவியலைக் கடந்து சென்றார்கள். அன்னார் தமது கையை அதற்குள் நுழைத்தபோது, அன்னாரது விரல்களில் ஈரம் பட்டது. இது என்ன விஷயம்? உள்ளே ஈரமாக இருக்கிறதே? என்று கேட்டார்கள். தானியத்தின் உரிமையாளர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதன் மீது மழை பெய்து விட்டது என்றார். அதற்கு அன்னார், பின்பு ஏன் அதைத் தானியத்தின் மேல் பகுதியில் வைக்கவில்லை? அப்போதுதானே மக்கள் அதைப் பார்க்க முடியும் என்று கூறினார்கள். மேலும், யார் ஏமாற்றுகிறாரோ அவர் என்னைச் சார்ந்தவர் அல்ல என்றும் கூறினார்கள்.”

எனவே, இன்று நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது உண்மையான ஈமான் கொண்டிருப்பதாகப் பிரகடனம் செய்கிறோம் என்றால், நமது ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் உண்மையின் உயர்தரம் இருக்க வேண்டும். இல்லையெனில், "நீங்கள் என்னைச் சார்ந்தவர்கள் அல்ல" என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். "பிறகு, உங்களுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை" என்று கூறியுள்ளார்கள்.

எப்போதும் உண்மை பேசுவதாலும், அமானிதம் மற்றும் நேர்மையில் மிகச் சிறந்து விளங்கியதாலும் அன்னார் மக்களிடையே 'சாதிக்' மற்றும் 'அமீன்' என்று புகழ்பெற்றிருந்தார்கள்.

ஓர் எழுத்தாளர் எழுதியுள்ளார்: ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு முன்னால் அறியாமைக் காலத்தில், அந்த மக்களிடம் எச்சரிக்கை செய்பவர் எவரும் வந்திருக்கவில்லை. அதாவது, அந்த சமூகத்தில் எந்த நபியும் வந்திருக்கவில்லை. மக்கள் சிலைகளையும் பொய் கடவுள்களையும் வணங்கிக் கொண்டிருந்தனர்; ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அந்த ஷைத்தானியக் குழுவினர்களுக்கிடையிலும், சிலை வணங்குபவர்களுக்கிடையிலும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் எந்தச் சிலையின் பக்கமும் ஆர்வம் காட்டியதில்லை. அந்த மக்களுடன் எந்த சபையிலும் கலந்துகொண்டதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஒருபோதும் பொய் வார்த்தைகள் வெளிப்பட்டதில்லை. மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையானவர், நம்பிக்கையானவர், சகிப்புத்தன்மை கொண்டவர் மற்றும் மிகுந்த கருணையாளர் என்று கருதினர்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. இஸ்லாத்திற்கு முந்தைய அறியாமைக் காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமே தீர்ப்புகள் கோரப்பட்டன.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உயரிய குணங்களுக்கு அன்னாரது சமூகமே அளித்த பொதுவான சாட்சி உள்ளது. அன்னார் நபித்துவ வாதம் செய்வதற்கு முன்னரே, அன்னாரது சமூகத்தினர் அன்னாருக்கு 'அமீன்' மற்றும் 'சித்தீக்' என்று பெயரிட்டனர். உலகில் கடுமையான சோதனைகளைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்காத மனிதர்களும் பலர் உள்ளனர். ஆம்! அவர்கள் பொதுவான சோதனைகளைக் கடக்கிறார்கள். ஆனால் அவ்வாறிருந்தும் அதற்காக சமூகம் அவர்களுக்கு எந்தச் சிறப்புப் பெயரையும் வழங்குவதில்லை. உதாரணமாக, போரில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு வீரரும் தனது உயிரைப் பணையம் வைக்கிறார். ஆனால் சமூகம் ஒவ்வொருவருக்கும் 'விக்டோரியா கிராஸ்' வழங்குவதில்லை; ஜெர்மன் சமூகம் ஒவ்வொருவருக்கும் 'அயர்ன் கிராஸ்' வழங்குவதில்லை. அதேபோல், ஒரு மனிதருக்கு முழு சமூகமும் 'அமீன்' மற்றும் 'சித்தீக்' என்ற பட்டத்தை வழங்குவது ஒரு சாதாரண விஷயமல்ல.

எனவே, அரேபியாவின் நூற்றுக்கணக்கான ஆண்டுகால வரலாற்றில் ஒரே ஒரு மனிதருக்கு மட்டும் சமூகம் இப்பெயர்களை வழங்கியது என்றால், அவரது அமானிதம் மற்றும் உண்மைத்தன்மை ஆகிய இரண்டுமே மிக உயர்ந்த நிலையில் இருந்தன என்பதைக் காட்டுகிறது. அவற்றிற்கு இணையான முன்மாதிரியை அரேபியர்கள் வேறு எவரிடமும் கண்டதில்லை. அரேபியர்களின் நுணுக்கமாக ஆராயும் குணம் காரணமாக உலகில் தனித்துவமானவர்கள் ஆவர். எனவே, அவர்கள் எதை அபூர்வம் என்று கூறுகிறார்களோ, அது நிச்சயமாக உலகால் அபூர்வமாகவே கருதப்படத் தகுதியானதாகும்.

**ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்**: "ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மனைவியிடம் எனக்கு இவ்வாறு வஹி வந்துள்ளது என்று தகவல் தருகிறார்கள். அதற்கு மனைவி, என்ன பொய் புனையத் தொடங்கிவிட்டீர்கள்? என்று கூறவில்லை. மாறாக, தாங்கள் கவலைப்படாதீர்கள்; தாங்கள் எதைக் கண்டீர்களோ அது சரியானதுதான். அல்லாஹ் தங்களை ஒருபோதும் வீணாக்க மாட்டான். ஏனெனில் தாங்கள் பொய் பேசுவதில்லை, ஏழைகளின் சுமையைத் தாங்குகிறீர்கள், மறைந்துபோன நன்மைகளை நிலைநாட்டுகிறீர்கள், விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள், உண்மைக்கும் சத்தியத்திற்கும் உதவுகிறீர்கள் என்று கூறினார்கள். அவர்கள் அன்னாரை தனது சகோதரர் வரகா பின் நவ்ஃபலிடம் அழைத்துச் செல்கிறார்கள். அவர் இஸ்ரேலிய வேதங்களை அறிந்த அறிஞராக இருந்தார். அவர் இதைக் கேட்டவுடனேயே, இந்த வஹீயில் மூஸாவுக்கு வந்த வஹீயைப் போன்றே கட்டளைகளும் சட்டங்களும் காணப்படுகின்றன என்று கூறுகிறார்.

வீட்டில் பெரியப்பா மகன் இருக்கிறார்; அவர் இளைஞராக இருந்தார். இளைஞர்களிடையே பிரச்சாரம் செய்யச் சிறந்தவராகவும் இருந்தார். அவர் தமது சகோதரர் மற்றும் அண்ணியாரின் பேச்சைக் கேட்டுவிட்டு, தாங்களே உண்மையானவர் என்றும் நிச்சயமாக அல்லாஹ் தங்களிடம் பேசியிருக்கிறான் என்றும் நானும் உறுதியாக நம்புகிறேன் என்று கூறுகிறார். பிறகு, ஒரு விடுதலை செய்யப்பட்ட அடிமை இருக்கிறார்; அவர் அன்னாரது நற்குணங்களால் கவரப்பட்டு, தனது தாய் தந்தையை விட்டுவிட்டு அன்னாரது வாசலிலேயே தங்கிவிட்டார். மெதுமெதுவாக நடக்கும்

பேச்சுகளைக் கேட்கும்போதும், தனது எஜமானரின் முகத்தில் கவலை மற்றும் சிந்தனையின் அறிகுறிகளைக் காணும்போதும், அவர் முன்வந்து தனது எஜமானரின் கையைப் பிடித்துக்கொண்டு, எனது எஜமானரே! தாங்கள் எதைக் கண்டீர்களோ அதுவே நடக்கும். தாங்கள் சொன்னதும் கண்டதும் உண்மையே. என்னையும் தங்களுடனேயே இருக்க விடுங்கள் என்று கூறுகிறார். பிறகு, ஒரு நெருங்கிய நண்பர் இருக்கிறார்; ஒரே சிப்பியில் வளரும் மற்றொரு முத்தைப் போல. அவர் தனது நண்பர் சிறகில்லாமல் பறக்கத் தொடங்கிவிட்டார் என்றும் ஒருவேளை அவரது மூளையில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றும் கேள்விப்படுகிறார். அவர் வந்து, இந்த விஷயங்கள் உண்மையா என்று மட்டும் சொல்லுங்கள் என்கிறார். அன்னார் அதை உறுதிப்படுத்தியதும், எனது உண்மையான நண்பரே! நான் தங்கள் தூதுத்துவத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்கிறார்.

அல்லாஹ்வின் திட்டத்தைப் பாருங்கள்! எதிர்ப்பின் புயல் வருவதற்கு முன்னரே, அன்னாருக்கு எவ்வாறு தோழர்களை உருவாக்கித் தந்துவிட்டான்! ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் சுமையைப் பகிர்ந்து கொள்ள ஓர் அமைச்சரை வேண்டிப் பிரார்த்தித்தார்கள். ஆனால் முஹம்மது ரசூலுல்லாஹ்(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் கேட்காமலேயே ஐந்து அமைச்சர்களைக் கொடுத்துவிட்டான். எத்தகைய அமைச்சர்கள் என்றால், அன்னாரது சுமையைப் பகிர்ந்து கொள்வதில் மேலோங்கி நின்றனர்.

வரகா அவர்கள் விரைவில் மரணமடைந்த போதிலும், அழியாத ஒரு சாட்சியத்தை அன்னாரின் உண்மைக்காக வழங்கிச் சென்றார். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் ஒரு பெண்ணாக இருந்து எவ்வாறான பணிகளைச் செய்து காட்டினார்கள் என்றால், அதைக் கண்டால் வீரமிக்க ஆண்களின் கண்கள் கூட (வெட்கி)த் தாழ்ந்துவிடும். ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள் அதற்குப் பிறகு இருபது ஆண்டுகள் தியாகத்தின் இணையற்ற முன்மாதிரியைக் காட்டினார்கள். இறுதியில் வாள் முனைகளுக்கு முன்னால் தனது இரத்தத்தைச் சிந்தி, ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அமைச்சர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நிரூபித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோர் அன்னாரது மறைவுக்குப் பிறகும் இருந்து, கலீஃபாக்களாகப் பொறுப்பேற்று அமைச்சரவையின் சான்றை ஒரு புதிய கோணத்தில் நிரூபித்தனர்."

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்**: "நமது தலைவரும் எஜமானருமான ஹஸ்ரத் முஹம்மது ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை மற்றும் விசுவாசத்தைப் பாருங்கள். அன்னார் அனைத்து வகையான தீய திட்டங்களையும் எதிர்த்தார்கள். பலவிதமான கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்தார்கள். ஆனால் அதனை பொருட்படுத்தவில்லை. இந்த உண்மை மற்றும் விசுவாசத்தின் காரணமாகவே அல்லாஹ் தனது அருளைப் பொழிந்தான். இதனால்தான் அல்லாஹ்,

إِنَّ اللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ ۚ يَٰٓأَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

என்று கூறியுள்ளான். அதாவது, 'நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது அனைத்து வானவர்களும் தூதர் மீது ஸலவாத் கூறுகிறார்கள். ஈமான் கொண்டவர்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுங்கள்.'

இந்த வசனத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல்கள் எவ்வாறு இருந்தன என்று தெரிய வருகிறது என்றால், அல்லாஹ் அவர்களது புகழை அல்லது குணங்களை வரையறுக்க ஒரு குறிப்பிட்ட சொல்லைப் பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. சொற்கள் கிடைத்திருக்கலாம்; ஆனால் அவனே அவற்றைப்

பயன்படுத்தவில்லை. அதாவது, அன்னாரது நற்செயல்களின் புகழ் வரையறைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இத்தகைய வசனம் வேறு எந்த நபியின் சிறப்பிற்காகவும் பயன்படுத்தப்படவில்லை. அன்னாரது ஆன்மாவில் அந்த உண்மையும் தூய்மையும் இருந்தது. அன்னாரது செயல்கள் அல்லாஹ்வின் பார்வையில் எந்த அளவிற்கு விருப்பமானவையாக இருந்தன என்றால், வருங்காலத்தில் மக்கள் நன்றிக் கடனாக ஸலவாத் கூற வேண்டும் என்று அல்லாஹ் நிரந்தரமான கட்டளையை வழங்கியுள்ளான். அன்னாரது தைரியமும் உண்மையும் எத்தகையது என்றால், நாம் முன்னோர்களையோ அல்லது பின்னோர்களையோ பார்த்தால் அதற்கு இணையான ஒன்றைக் காண முடியாது.

....நமது தூய நபி (ஸல்) அவர்களோ விலங்குகளை விட மோசமாக இருந்த ஆயிரக்கணக்கான மனிதர்களைச் சீர்திருத்தினார்கள். அவர்களில் சிலர் தாய் மற்றும் சகோதரிகளுக்கு இடையே விலங்குகளைப் போலவே வேறுபாடு அறியாதவர்களாக இருந்தனர். அநாதைகளின் சொத்துகளைப் உண்டனர். இறந்தவர்களின் சொத்துகளை உண்டனர். சிலர் நட்சத்திரங்களை வணங்குபவர்களாகவும், சிலர் இறைமறுப்பாளர்களாகவும் இருந்தனர். சிலர் இயற்கையை வணங்குபவர்களாக இருந்தனர். அரேபிய தீபகற்பம் தனக்குள் பல மதங்களின் சங்கமமாக இருந்தது. இதன் மூலம் ஒரு பெரிய நன்மை என்னவென்றால், திருக்குர்ஆன் அனைத்து வகையான போதனைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. உலகில் சாத்தியமான ஒவ்வொரு தவறான நம்பிக்கையையும் அல்லது தீய போதனையையும் வேரறுக்கத் தேவையான போதனைகள் அதில் உள்ளன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் அனுப்பியதும், அறியாமை அதன் உச்சத்தில் இருந்த காலத்தில் அனுப்பியதும், பிறகு அந்த விலங்குகளை மனிதர்களாக மாற்றியதும் அல்லாஹ்வின் ஆழமான ஞானமும், ஆளுமையின் அடையாளமும் ஆகும்."

اللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى آلِ مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றியவாறு உண்மையின் தரங்களை உயர்த்திக் கொண்டே செல்லும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلاَ هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلاَّ اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)